## <u>தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் ஜுலை (23)</u>

## <u>நீர் நிலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், நீர் நிலைகளின் கரைப்பகுதி மற்றும் பொது இடங்களில் பெருமளவில் மரம் நடுதல்</u>

தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் அனைத்து தர மக்கள் பங்களிப்புடன் 2022 ஜுன் 3–ஆம் தேதி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல் படுத்திட ஆறு வகையான தலைப்புகளில் இதன் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஜுலை மாதம் 4–வது சனிக்கிழமை அதாவது 23.07.2022 அன்று **நீர் நிலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், நீர்நிலைகளின் கரைப்பகுதி மற்றும் பொது இடங்களில் பெருமளவில் மரம் நடுதல்** என்ற தலைப்பின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்கண்ட அறிவுரைகள் பின்பற்றி இப்பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- ❖ மாவட்ட ஆட்சியர் தலைமையில் இதற்கான செயல்திட்டம் குறித்து ஆலோசனை மற்றும் இப்பணியுடன் தொடர்புடைய இதர துறைகளுடனான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- ❖ கண்டறியப்பட்ட அனைத்து தன்னார்வலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி தேசிய மாணவர் இயக்க மற்றும் தேசிய பசுமை இயக்க தன்னார்வலர்கள், NULM ஒருங்கிணைப்பாளர்கள், NGOs சுய உதவிக் குழுக்கள், குடியிருப்போர் நல சங்க பிரதிநிதிகள் மற்றும் இதர தன்னார்வலர்களின் பணிகளை முன்பே திட்டமிட்டு அவர்களை சிறு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு நீர் நிலைப் பகுதிகளிலும் பணியாற்ற செய்ய வேண்டும்.
- ❖ அனைத்து நீர்நிலைகளையும் கண்டறிந்து அதற்கான குழுக்கள், தேவையான இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்களையும் முன்பே ஏற்பாடு செய்திட வேண்டும்.

- ❖ நீர் நிலைகளை சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை குறித்து மிக விரிவான செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி அதனை தொடர்புடைய குழுவின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் கூட்டம் நடத்தியோ அல்லது வாட்ஸ்அப் குழு ஏற்படுத்தி அதன் மூலமோ தெரிவிக்க வேண்டும்.
- ❖ ஒவ்வொரு நீர் நிலையிலும் செயப்படுத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளையும், ஒருங்கிணைக்க மற்றும் மேற்பார்வையிட ஒரு பொறுப்பு அலுவலரை நியமித்தல் வேண்டும்.
- ❖ பொறுப்பு அலுவலர் அனைத்து வகைகளிலும் அந்நீர்நிலை சுத்தப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- ❖ தன்னார்வலர்களின் உதவியோடு அனைத்து நீர் நிலைகளில் மிதக்கும் பிளாஸ்டிக் மற்றும் அனைத்து திடக்கழிவுளையும் நீக்க வேண்டும்.
- ❖ நீர் நிலைகளின் அருகில் உள்ள கருவேலமரம் மற்றும் நீர் நிலையில் உள்ள ஆகாயத்தாமரை, நீர் நிலையின் ஓரங்களில் ஆக்கிரமிப்பாக உள்ள அனைத்து புல் மற்றும் செடிகளையும் முழுமையாக அகற்ற வேண்டும்.
- ❖ அனைத்து நீர் நிலை மற்றும் வடிகால்களை முழுமையாக தூர் வார வேண்டும்.
- ❖ நீர் நிலைகளின் கரைப்பகுதி மற்றும் பொது இடங்களில் மரம் நடுதல் வேண்டும்.
- ❖ நகரின் அனைத்து சாலைகளிலும் உள்ள தடுப்பு பகுதிகள் (central median) அனைத்திலும் முழுமையாக காற்றின் மாசினை குறைப்பதற்கேற்ற செடிகளை நட வேண்டும்.
- ❖ நீர் நிலைகளின் அருகில் உள்ள குப்பையை முழுவதுமாக அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ தொடர்ந்து குப்பை கொட்டும் இடமாக (Garbage vulnerable Point) இருந்தால் குப்பையை முழுவதுமாக அகற்றி, மீண்டும் குப்பை கொட்டப்படாதவாறு தொடர் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்.
- ❖ தேவையான இடங்களில் CCTV கேமரா பொருத்தலாம்.
- ❖ நீர் நிலைகளின்அருகே குப்பை கொட்டும் இடங்கள் (dumpsites) இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள நீர் நிலையாக இருந்தால் ஒவ்வொரு 50 மீட்டர் இடைவெளியிலும் மக்கும் மற்றும் மக்கா குப்பைக்கு இரு குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட வேண்டும்.
- மக்கள் நடமாட்டம் உள்ள நீர் நிலைகளில் ஒவ்வொரு 50 மீட்டர் இடைவெளியிலும் குப்பை கொட்டுவதை தவிர்க்கும் பொருளிலான போர்டுகள் வைக்கப்பட வேண்டும்.
- எனது குப்பை எனது பொறுப்பு என்ற வாசகம் அடங்கிய போர்டுகள்வைக்கலாம்.
- கழிவு நீர் மற்றும் தொழிற்சாலையில் வெளியேற்றப்படும் கழிவு நீர் நீர்நிலையில் கலக்காமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- குடியிருப்பு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களின் முகத்துவாரத்தில் உள்ள அனைத்து பிளாஸ்டிக் உள்ளிட்ட திடப்பொருட்கள், மணல் மற்றும் வண்டலை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும்.
- மழைநீர் வடிகால்களில் ஆக்கிரமிப்பு இருந்தால் அதனை நீக்க வேண்டும்.
- அனைத்து மழைநீர் வடிகலன் சுற்றுப்புறங்களும் (Boundaries) மிக சுத்தமாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து மழைநீர் வடிகால்களிலும் குறிப்பிட்ட இடைவெளியில் வடிகட்டிகள் (Screen / Filter) இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மழைநீர், நீர் நிலையை சென்று சேரும் இடத்தில் வடிகட்டி (Screen / Filter) இருப்பதை கட்டாயம் உறுதி செய்தல் வேண்டும்.
- நீர் நிலைகளின் அருகே எந்த கட்டிடக் கழிவும் கொட்டப்படாமல் பார்த்து கொள்ள வேண்டும்.
- வழக்கமாக நீர் நிலைகளின் அருகே கட்டடக்கழிவு கொட்டப்படும் பட்சத்தில், அதனை முழுவதுமாக அப்புறப்படுத்தி, அதற்கான கண்டறியப்பட்ட இடத்தின் (Designated place) விபரத்தை அவ்விடத்தில் ஒரு அறிவிப்பு பலகை மூலம் தெரியப்படுத்த வேண்டும்.
- கட்டிடக் கழிவுகளை நீக்குவது மற்றும் அப்புறப்படுத்துவதில் பொதுமக்களின் பங்கு குறித்து, முக்கியமான விபரங்களை நகர்ப்புற உள்ளாட்சி அலுவலகம், பேருந்து நிலையம் மற்றும்

கட்டிடக்கழிவுகள் அதிகம் கொட்டப்படும் (unauthurised C& D Waste dumping Points) இடங்களில் அறிவிப்புப் பலகை மூலம் தெரியப்படுத்தலாம்.

- ❖ கட்டிடக் கழிவுகளை முறையற்று கையாளுவதால் காற்று மாசுபடுதல் மற்றும் நீர் நிலைகளில் குப்பை கொட்டுவதால் ஏற்படும் தீங்கு குறித்தும், சுற்றுச் சூழல் மாசுபடுவது குறித்தும் குடியிருப்போர் நலச் சங்கங்களில் கூட்டம் மூலமாகவும், மக்கள் கூடும் இடங்களில் சிறு கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.
- ❖ ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் கட்டிடக் கழிவுகளை எந்த இடத்தில் கொட்ட வேண்டும் என்ற விபரம் மிகத் தெளிவாக ஊடகங்கள் வாயிலாக மற்றும் அறிவுப்பலகைகள் மூலமாக தெரியப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ கட்டிடக் கழிவுகளை சேர்த்து வைக்க அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் தனி இடம் **(Designated place)** கட்டாயம் கண்டறியப்பட வேண்டும்.
- ❖ அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளும் அனைத்து நீர் நிலை மற்றும் மழைநீர் வடிகால்களின் GIS விபரங்களை அந்த வரைபடத்தில் பொருத்தி அதனை SBM portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- ❖ தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் **Swachhtam portal – ல் IEC activities** தலைப்பில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- ❖ Swachhtam Suruekshan க்கான போட்டியில் இந்தப் பதிவுகளை கொண்டே அனைத்து நகரங்களும் தர வரிசைப்படுத்தப்படுவதால், இந்த பதிவேற்றம் செய்யப்படுவதை அனைத்து ஆணையர்களும் உறுதிப்படுத்த வேண்டும்.
- ❖ நான்கு தெளிவான புகைப்படங்கள், முக்கிய விபரங்களுடன் நகர் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் **sbmpmucma@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

- அனைத்து விபரங்களும் நகர்ப்புற உள்ளாட்சிகள் சமூக வலைதள பக்கங்களிலும், **MawsTamilnadu, SbmurbanTN** என்ற **Twitter** மற்றும் **Facebook** பக்கங்களிலும் பதிவு செய்ய வேண்டும்.
- Swachhta app அதிக அளவு பதிவிறக்கம் செய்வதுடன், அனைவரையும் அந்த செயலியை ஆக்க பூர்வமாக உபயோகப்படுத்த ஊக்கவிக்க வேண்டும்.
- அதில் நீர் நிலைகள் மற்றும் கட்டிடக் கழிவுகள் மாசுபடுத்துவது குறித்து குறைகளை பதிவிடலாம் என்ற விபரத்தினை தொடங்க வேண்டும்.
- அனைத்து நடவடிக்கைகளையும் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்கள் மூலம் பிரபலபடுத்த பட வேண்டும்.
- பணியின் போது தூய்மைப்பணியாளர் மற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கு தேநீர், சிற்றுண்டி போன்றவை ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து செயல்பாடுகளையும் தூய்மை உறுதி மொழியுடன் ஆரம்பித்தல் வேண்டும்.

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் பெருமளவிலான மக்கள் பங்களிப்புடன் தூய்மையான நகரங்களை உருவாக்குவதாகும். அதனை நோக்கியே அனைத்து செயல்பாடுகளும் அமைதல் வேண்டும்.